DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.85-2022**

**Deposition of Witness for Prosecution : P.W.8**

| பெயர் | : | ராஜேஷ் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
|---|---|---|---|---|---|
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 13.06.2025

<u>முதல் விசாரணை</u>

நான் செருதுாரில் வசிக்கிறேன். இறந்துபோன செல்வக்குமார் எனக்கு தெரியாது. நான் எதிரிகளை பார்த்தது இல்லை. எனக்கு மீன்பிடி தொழில். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்னும் தெரியாது. கீழையூர் போலீசார் விசாரித்தபோது நான் அப்போது ஊரில் இல்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளர் எங்களை விசாரித்தார் அப்போது கடந்த 10.07.2021 ம் ஆண்டு மாலை 4 மணியளவில் புதுப்பாலம் மேற்குப்பக்கம் வெள்ளை ஆற்று தென்கரையில் வலையை சீர் செய்துகொண்டிருந்த செல்வக்குமார், வினோத், மதியழகன் ஆகியோரை வெற்றிச்செல்வன் செல்வக்குமாரிடம் தனக்கு கொடுக்க

வேண்டிய 25,000 ரூபாயை கொடுக்க சொல்லி கேட்டார் என்றும் அதற்கு வினோத் தர முடியாது என்று சொன்னதும் வெற்றிச்செல்வனுக்கும் விநோத்திற்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும் வினோத் அவர் போட்டிலிருந்து ஐஸ் உடைக்கும் சவுக்கு மரக்கட்டையை எடுத்து வெற்றிச்செல்வனின் தலையில் ஓங்கி அடித்தார் என்றும் அசிங்கமாக திட்டி நான் எதற்கு பணம் தர வேண்டும் என்று கேட்டார் என்றும் தடுக்க சென்ற பரமசிவனை தலையில் கட்டையால் ஓங்கி அடித்து அவருக்கும் இரத்தக் காயம் ஏற்பட்டது என்றும் வினோத்குமாரின் மாமனார் செல்வகுமாரும் சரவணனும் வெற்றிச்செல்வனையும் பரமசிவனையும் கையில் அடித்தார் என்றும் வினோத் கட்டையைக் காட்டி மிரட்டினார் என்றும் தலையில் காயம் பட்ட வெற்றிச்செல்வன் நிலைதடுமாறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டார் என்றும் அவர் விழுந்ததை யாரும் கவனிக்கவில்லை என்றும் சிறிது நேரம் கழித்து வெற்றிச்செல்வனைக் காணாததால் எல்லோரும் ஆற்றில் தேடினார்கள் என்றும் ஆற்றில் அடிப்பகுதியில் சேறு அதிகம் என்பதால் யாரும் அடிப்பகுதிவரை செல்லவில்லை என்றும் அதன் பின்னிட்டு நான் ஆற்றின் அடிப்பகுதிவரை தேடி சென்று சகதியில் மாட்டிக்கொண்டவரை இழுத்து பார்த்து என்னால் முடியாததால் யாரும் துணைக்கு வாருங்கள் என்று சொன்னதும் விஜி என்பவர் வந்து நானும் அவரும் சேற்றில் மாட்டிக்கொண்ட வெற்றிச்செல்வனை மேலே கொண்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மற்றவர்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றும் வெற்றிச்செல்வன் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன் என்று கேள்விபட்டு ஊர் பஞ்சாயத்தில் பேசி யாரும் சாட்சி சொல்லக் கூடாது என்று சொன்னதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.85/2022**

**Deposition of Witness for Prosecution : P.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உதயகுமார் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 13.06.2025

**முதல் விசாரணை**

நான் செருதூரில் வசிக்கிறேன். இறந்துபோன வெற்றிச்செல்வனை எனக்கு தெரியும். மாதம், தேதி தெரியவில்லை. ஆனால் 2021 ம் வருடம். போட்டை நிறுத்தும் இடத்தில் இறந்ததாக சொன்னார்கள். மறுநாள் நான் அந்த இடத்திற்கு சென்றேன். காவல்துறையினர் இருந்தார்கள். அவர்கள் அவர்களுக்குள்ளாக எதோ செய்தார்கள் நான் பக்கத்தில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செருதூரில் உள்ளது வேளாங்கண்ணி புதுப்பாலம். அது வேளாங்கண்ணிக்கும் செருதூருக்கும் இணைப்புப்பாலம். என்னிடம் காட்டப்படும் முதல் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.4 ஆகும். இரண்டாவதாக காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மேற்படி இடத்தை பார்வையிட்டு அந்த இடம் எப்படி உள்ளது என்பதை எழுதிக்கொண்டார் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்திட்டேன் என்றும் அதுபோல் அந்த இடத்தின் அருகில் இருந்த ஐஸ் உடைக்கும் சவுக்கு கட்டையை மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும் அதிலும் நான் கையெழுத்திட்டேன் என்றும் மேலும் ஆற்றின் தண்ணீரை ஒரு பிளாஸ்டிக் பாட்டிலில் ஆய்வாளர் பரிசோதனைக்காக எடுத்துக்கொண்டார் என்றும் அதிலும் சாட்சியாக கையெழுத்திட்டுவிட்டு எதிரிகளை கேட்டுக்கொண்டதால் எனக்கு எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று படித்துப் பார்த்துதான் கையெழுத்து போட்டேன்.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.85/2022**

**Deposition of Witness for Prosecution : P.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாதவன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 13.06.2025

**முதல் விசாரணை**

நான் வானவன்மகாதேவி கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்துபோன வெற்றிச்செல்வன் எனக்கு மாமா மகளின் கணவர் ஆவார். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் யார் யாரை கைது செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவருடைய பாடியையும் நான் பார்க்கவில்லை. வெற்றிச்செல்வன் அடித்து இறந்துவிட்டதாக தகவல் தெரியும். வினோத் என்பவர் அடித்ததாக தெரியும். வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

11.07.2021 ம் தேதி நாகை மருத்துவமனையில் பிரேத அறையில் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்ததாகவும் நானும் அப்போது உடன் இருந்தேன் என்றும் அதன் பின்னிட்டு சுமார் 4

மணியளவில் வேளாங்கண்ணி ஆர்ச் பஸ் ஸ்டாப் அருகில் வந்தபோது எதிரிகள் செல்வக்குமார், சரவணன் ஆகியோரை ஆய்வாளர் கைது செய்தார் என்றும் அதில் நான் சாட்சியாக இருந்தேன் என்றும் அதன் பின்னிட்டு செல்வக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக இருந்தேன் என்றும் சொல்லிவிட்டு வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கிறார்.